**அசல் வழக்கு எண். 244/2018** **தேதி13.06.2025**

**பி.வா.சா.2 - மணி (எ) மாரியப்பன்**

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. வாதி தாவா சொத்தை பார்வையிட வேண்டி நீதிமன்றத்தில் நீதிமன்ற ஆணையர் நியமனம் கோரி மனு தாக்கல் செய்து அந்த மனு அனுமதிக்கப்பட்டு அதன் அடிப்படையில் நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிட்டார் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கைக்கு ஆட்சேபனை தாக்கல் செய்தேனா என்றால் எனது வழக்கறிஞர் தாக்கல் செய்திருப்பார். மேற்படி ஆணையர் அறிக்கையில் என்ன விவரம் சொல்லப்பட்டிருந்தது என்று தெரியுமா என்றால் தெரியாது. எனது வழக்கறிஞரிடம் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் நான் கேட்கவில்லை.

2. நான் தாக்கல் செய்த பி.சா.ஆ.9 ஆவணத்தில் வாதியின் நிலத்திற்கு கீழ்புறம் பாதை உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் பாதையானது சர்வே எண்.75/1 நிலத்தில் உள்ளது. சர்வே எண்.71,72 மற்றும் 73 ஆகிய இடங்களில் புறம்போக்கு பாதை உள்ளது. தாவா ஆ பட்டியல் சொத்தாக காட்டப்பட்டுள்ள பாதையானது பி.சா.ஆ.9 ஆவணத்தில் தென்வடல் பாதையாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பாதை எங்களுக்கு பட்டா பாதையாகும். வாதிக்கும் எனக்கும் பட்டா சம்மந்தமாக வாக்கு வாதங்கள் ஏற்பட்டுள்ளதா என்றால் இல்லை. மேற்படி பிரச்சனை சம்மந்தமாக நாங்கள் காவல் நிலையம் சென்றுள்ளோமா என்றால் இல்லை. நாங்கள் தண்ணீர் பிரச்சனைக்காக சென்றுள்ளோம்.

3. மேற்படி தண்ணீரானது மேற்படி பாதையில் தான் வருமா என்றால் இல்லை. பதிலுரையில் மேற்படி விவரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. தாவா ஆ பட்டியல் சொத்தை உழுவடை செய்து வருகிறோமா என்றால் சரிதான். எங்கள் இடத்தில் உழுவடை செய்து வருகிறோம். மேற்படி பிரச்சனை சம்மந்தமாக காவல் நிலையம் சென்றோம் என்றால் சரியல்ல. மேற்படி பிரச்சனை சம்மந்தமாக காவல் நிலையம் சென்று அங்கு நீதிமன்றம் மூலமாக பரிகாரம் தேடிக் கொள்ளுமாறு கூறப்பட்டது என்றால் சரியல்ல. நாங்கள் காவல் நிலையம் செல்லவில்லை. வாதி பாதை பயன்படுத்துவதில் நான் மட்டும் தான் பிரச்சனை செய்கிறேன் என்றும், மற்ற பிரதிவாதிகள் அந்த பாதையை அனுசரித்து வாதி பாதையை பயன்படுத்துவதில் எந்த

பிரச்சனையும் இல்லை என்று கூறியுள்ளனரா என்றால் சரியல்ல.

4. மேற்படி பாதையானது எங்களுக்கு பாத்தியப்பட்ட பாதையாகும். ஆறுமுகம், முனியம்மாள், ஐயம்மாள், செல்வராஜ், பொம்மா நாயக்கர் ஆகியோர் இவ்வழக்கில் தரப்பினர்களாக உள்ளார்களா என்றால் உள்ளார்கள். மேற்படி தரப்பினர்கள் எனது இடத்திற்கும் நத்தம் பட்டி முதல் மாணிக்கம்புறம் செல்லும் ரோட்டிற்கும் இடையில் தான் ஆறுமுகம், முனியம்மாள், ஐயம்மாள், செல்வராஜ், பொம்மா நாயக்கர் ஆகியோரின் இடம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி நபர்களின் இடத்தின் வழியாக சென்று தான் நத்தம் பட்டி முதல் மாணிக்கம்புறம் செல்லும் ரோட்டிற்கும் செல்ல முடியும் என்றால் சரிதான்.

5. ஆறுமுகம், முனியம்மாள், ஐயம்மாள், செல்வராஜ், பொம்மா நாயக்கர் ஆகியோரின் இடங்களுக்கு குறுக்கே வேலி இல்லை என்றால் சரிதான். விவசாயம் செய்யும் போது மேற்படி பாதையை விட்டு விட்டு தான் கீழ்புறத்தில் மேற்படி நபர்கள் விவசாயம் செய்வார்கள் என்றால் சரிதான். மேற்படி பாதைக்கு மேல்புறத்தில் வேலி உள்ளது என்றும், கீழ்புறத்தில் வேலி இல்லை என்றால் சரிதான். மேற்படி பாதை எனது இடம் வரை வருகிறதாக நான் கூறியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி பாதை எனது இடம் வரை வருகிறதாக நான் கூறியதற்கான காரணம் எனது நிலங்களின் பத்திரங்களில் உள்ள நான்கு எல்லை விவரத்தில் மேற்படி பாதையானது குறிப்பிடப்படவில்லை என்பதால் தான் என்றால் சரியல்ல.

6. 1ம் பிரதிவாதி செல்வராஜ்வுடன் நல்ல உறவு முறை உள்ளது என்றால் சரிதான். தாவா ஆ பட்டியல் பாதையை 1ம் பிரதிவாதி செல்வராஜ் பத்திரத்தில் நான்கு எல்லை விவரத்தில் குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் சரிதான். எனது நிலம் , வாதியின் நிலம் மற்றும் மற்ற பிரதிவாதிகளின் நிலங்கள் அனைத்தும் ஆதியில் திருமலைகொழுந்தாபிள்ளை, வைரப்பிள்ளை, திருமலை ஆகியோருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். மேற்படி நபர்களிடமிருந்து நாங்கள் எங்கள் நிலத்தை கிரையம் பெற்றோம் என்றால் சரிதான். பொதுவாக கிரையம் பெறும் போது பின்னாடி இருப்பவர்களுக்கு பாதை காண்பித்து தான் கிரையம் பெறுவார்கள் என்றால் சரிதான்.

7. அதே போல் தான் தாவா ஆ பட்டியல் சொத்தை காண்பித்து வாதி கிரையம்

பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. தாவா ஆ பட்டியலில் உள்ள பாதையை காண்பித்து வாதி கிரையம் பெறவில்லை. வேறு ஒரு பாதையை காண்பித்து தான் கிரையம் பெற்றுள்ளார். வாதியின் கிரைய பத்திரத்தை நான் பார்த்தேனா என்றால் பார்த்ததில்லை. வாதியின் வா.சா.ஆ.4 கிரைய பத்திரத்தில் தாவா ஆ பட்டியல் பாதையானது நான்கு எல்லை விவரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது கிரைய பத்திரத்தில் வாதி ஒரு தரப்பினர் இல்லை என்றால் சரிதான். வாதியிடமிருந்து நான் கிரையம் பெறவில்லை என்றால் சரிதான்.

**வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct.

**Sd/-A.யுகாதிமரியா**

**Additional District Munsif,**
**Kulithalai.**

**அசல் வழக்கு எண். 154/2022** **தேதி13.06.2025**

**வா.சா.1 - இளங்கோவன்**

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. இந்த வழக்கு விவரம் எனக்கு நன்கு தெரியும் என்றால் சரிதான். வழககுரை தயாரிக்க விவரங்களையும் எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள விவரங்களும் நான் தான் வழக்கறிஞருக்கு சொன்னேன் என்றால் சரிதான். மேற்படி விவரங்கள் எனது தாயாராலும், எனது சகோதரராலும் ஒப்புக்கொள்ளப்பட்டவை என்றால் சரிதான். எனது தந்தை யாரிடமிருந்து கிரையம் பெற்றார் என்றால் கிருஷ்ண ரெட்டியார் என்பவரிடமிருந்து கிரையம் பெற்றார். கிருஷ்ண ரெட்டியாரிடமிருந்து எனது தந்தை கிரையம் பெற்ற சொத்தை தான் நான்கு பாகங்களாக பிரித்து அனுபவித்து வருகிறோம் என்றால் சரிதான். தாவா கிணறு எவ்வளவு நாட்களாக உள்ளது என்றால் தாவா சொத்தை எனது தந்தை வாங்கிய காலத்திலிருந்து இருக்கிறது.

2. தாவா கிணறு எப்போது வெட்டப்பட்டது என்று தெரியுமா என்றால் சுமார் 10 வருடங்களுக்கு முன்பு வெட்டப்பட்டது. தாவா கிணறுக்கான மின் இணைப்பு எவ்வளவு நாட்களாக இருக்கிறது என்றால் 1989 ம் வருடம் தாவா சொத்தை வாங்கிய நாளிலிருந்து இருந்து வருகிறது. தாவா கிணறு மற்றும் மின் இணைப்பும் உள்ள நிலத்தின் சர்வே எண் என்ன என்றால் சர்வே எண்.5 ஆகும். எனது தந்தை கிரையம் பெற்ற போது தாவா சொத்தில் தாவா கிணறு இல்லை என்றால் சரிதான். தாவா சொத்தை நான்கு பாகங்களாக எந்த தேதியில் பிரித்து கொண்டோம் என்றால் எனது தந்தை உயிருடன் இருந்த காலத்திலேயே பிரித்து கொண்டோம். மேற்படி பாகப்பிரிவினையானது எந்த தேதியில் நடந்தது என்ற விவரத்தை எனது வழக்குரையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பாகப்பிரிவினை பத்திரத்தில் தேதி உள்ளது.

3. மேற்படி பாகப்பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் எனது வழக்கறிஞரிடம் அதன் நகலை கொடுத்துள்ளேன். தாவா சொத்தில் எந்த பாகமும் பிரித்து கொள்ளவில்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்சொன்ன பாகப்பிரிவினை ஏதும் ஏற்படவில்லை என்றும், அவ்வாறு ஏற்பட்டிருந்தால் அதற்கான ஆதாரங்களை இவ்வழக்கில் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகளின் பதிலுரையில் உள்ள விவரங்களை எனது வழக்கறிஞரிடம் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். தாவா சொத்தில் நான்கு பாகங்களாக குறிப்பிடுவது யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் மருதை, மயாண்டி, ஏவுரி, காத்தான் ஆகியோருக்கு தலா ஒவ்வொரு பாகமாக பிரிக்கப்பட்டு பாத்தியப்பட்டது.

4. பிரதிவாதிகளை தவிர மீதியுள்ள மருதை மற்றும் காத்தான் ஆகிய இருவரையும்

இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். மேற்படி நபர்களை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்காத காரணத்தினால் இவ்வழக்கு நிலைநிற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனது தந்தை கிரையம் பெற்ற 03.07.1973 ம் தேதிக்கு பிறகு எனது தந்தையும் எங்கள் குடும்பமும் வேறு ஊருக்கு குடிபெயர்ந்து சென்று விட்டோம் என்றாலும், சில காலங்களாக ஊரில் குடியிருக்கவில்லை என்றால் சரியல்ல. எனது தந்தை கிரையம் பெற்ற 03.07.1973 ம் தேதியிலேயே பிரதிவாதியின் தந்தை ஏவுரி என்பவரும் கிருஷ்ண ரெட்டியாரிடமிருந்து தாவா சொத்துடன் சேர்த்து இதர சொத்துக்களையும் கிரையம் பெற்ற விவரம் தெரியுமா என்றால் எனது தந்தை சொல்லி எனக்கு தெரியும்.

5. கிரைய ஆவண எண்.3098/1973 என்ற பதிவு செய்யப்பட்ட ஆவணத்தின் மூலம் பிரதிவாதியின் தகப்பனார் தாவா சொத்தை கிரையம் பெற்றார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதிகளின் தந்தை கிரையம் பெற்ற பின்னர் அவர் தனது சொந்த தேவைக்காக தனது சொந்த செலவில் தாவா கிணறை வெட்டியுள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி நான்கு நபர்களும் சேர்ந்து தான் தாவா கிணற்றை வெட்டினார்கள். மேற்படி நான்கு நபர்களும் சேர்ந்து தான் தாவா கிணறை வெட்டியதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா கிணறு வெட்ட பிரதிவாதியின் தகப்பனாரை தவிர வேறு யாரும் எந்த பணமும் தரவில்லை எவ்வகையிலும் பங்களிப்பும் தரவில்லை என்றால் சரியல்ல. தாவா கிணறு மற்றும் தாவா மின் இணைப்பில் பிரதிவாதிகளை தவிர வேறு யாருக்கும் எந்த காலத்தில் உரிமை இல்லை என்றால் சரியல்ல.

6. தாவா கிணறு பிரதிவாதிகளின் தகப்பனார் கிரையம் பெற்ற சொத்தில் தான் உள்ளது என்றால் சரியல்ல. பொதுவாக கிணறிற்கு மின் இணைப்பு பெறும் போது சர்வே எண் மற்றும் நிலத்தின் விஸ்தீரணம் குறிப்பிட்டு தான் வாங்க முடியும் என்றால் சரிதான். தாவா மின் இணைப்பு மற்றும் தாவா கிணறு பிரதிவாதியின் தகப்பனார் ஏவுரி பெயரில் என்றால் நான்கு பேரும் சேர்ந்து ஏவுரி பெயரில் ஏற்படுத்தப்பட்டது. நான்கு பேரும் சேர்ந்து ஆவணம் ஏற்படுத்த வேண்டும் என்றால் நான்கு பேரும் எழுதி கொடுக்க வேண்டும் என்றும், அந்த எழுதி கொடுத்த ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் மின் இணைப்பு இரசீது உள்ளது. மேற்படி மின் இணைப்பு இரசீது யார் பெயரில் உள்ளது என்றால் ஏவுரி பெயரில் உள்ளது. மின் வாரிய சட்டப்படி எந்த சர்வே எண் மற்றும் விஸ்தீரணத்திற்காக மின் இணைப்பு பெறப்பட்டதோ அந்த சொத்திற்கு மட்டுமே மின் இணைப்பை பயன்படுத்த முடியும் என்றால் சரிதான்.

7. அதை தவிர வேறு நிலங்களுக்கு மின் இணைப்பை பயன்படுத்துவது தவறு என்றால் சரிதான். தாவா கிணறு பிரதிவாதியின் தந்தை தான் வெட்டினார் என்றும், மின்

இணைப்பிற்கான செலவும் பிரதிவாதியின் தந்தை ஏவுரி தான் தனது நிலத்தின் விஸ்தீரணத்திற்கு மட்டுமே செய்தார் என்றால் சரியல்ல. பிரதிவாதியின் தந்தை மட்டுமே செலவு செய்து மின் இணைப்பு பெற்றதால் அவரை தவிர வேறு யாருக்கும் அதில் உரிமை இல்லை என்றால் சரியல்ல. பொது செலவில் மின் இணைப்பு பெற்றோம். அதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்யவில்லை. அந்த காலத்தில் அவ்வாறு எதுவும் எழுதி வாங்கவில்லை.

8. நான் கூறுவது போல் எந்த செலவும் பொதுவில் செய்யவில்லை என்றாலும், வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. வழக்குரையில் குறிப்பிட்டுள்ளவாறு நான்கில் ஒரு நாள் வீதம் முறை வைத்து தண்ணீர் பாய்ச்சுவதாக குறிப்பிடுவது தவறு என்றால் இல்லை. மேற்சொன்னவாறு தான் நான்கில் ஒரு நாள் வீதம் முறை வைத்து தண்ணீர் பாய்த்து வருகிறோம். வாதிகளாகிய நாங்கள் எந்த காலத்திலும் தாவா கிணறிற்றிலிருந்தும், தாவா மின் இணைப்பிலிருந்தும் தண்ணீர் பாய்ச்சவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை கிரையம் பெற்ற 1989 ம் வருடத்திலிருந்து நாங்கள் தண்ணீர் பாய்ச்சி வருகிறோம். எனது வழக்குரையில் 2022 ம் வருடம் ஜுன் மாதம் பிரதிவாதிகள் நாங்கள் தண்ணீர் பாய்ச்சுவதை இடையூறு செய்ததாக குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரிதான்.

9. ஆனால் அதை மீறி நாங்கள் தண்ணீர் பாய்ச்சி கொண்டு தான் வருகிறோம். மேற்படி விவரத்தை நீதிமன்றத்தில் சொல்லவில்லை என்றும், ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் பிரதிவாதிகள் இடையூறு செய்ததாக நான் கூறியுள்ள நிலையில் வலியுறுத்துக்கட்டளை பரிகாரம் கோராமல் உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியுள்ளது ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல. காவல் நிலையில் நாங்கள் புகார் அளித்தற்கான புகார் இரசீதுகளை தாக்ல செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது போல நான் எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றும், அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

10. தாவா சொத்தில் நாங்கள் கூறுவது போல் எங்களுக்கு எந்த உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கு இடையூறு ஏற்படுத்தி பிரதிவாதிகளின் உரிமையில் தலையீடு செய்வதற்காகவே இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct.

**Additional District Munsif,**

**Kulithalai.**

**அசல் வழக்கு எண். 220/2017** **தேதி13.06.2025**

**வா.சா.1 - ஜெயராமன்**

**1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

வா.சா-ஆ 20 முதல் வா.சா.ஆ.22 ஆகிய ஆவணங்கள் ஜானகி பெயரில் உள்ள சொத்து வரி இரசீதுகள் என்றால் சரிதான். வா.சா.ஆ.23 முதல் வா.சா.ஆ.26 வீட்டு வரி'இரசீதுகள் முருகன் மனைவி தலமக்காள் என்பவர் பெயரில் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.27 மற்றும் வா.சா-ஆ-28 ஆகிய வீட்டு வரி இரசீது தலம நாயக்கர் பெயரில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்கு சம்மந்தம் இல்லாத ஆவணங்கள் என்றால் சரியல்ல. எனவே இவ்வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct.

**Additional District Munsif,**
**Kulithalai.**